பெயர் :

<u>வாக்கியங்களைக் நிரல்படுத்திக் கோவையாகப் பத்தியில் எழுதுக</u>

இந்தப் பொங்கல் பண்டிகை நான்கு நாட்கள் கொண்டாடப்படுகிறது.

மார்கழி கடைசி நாளன்று போகி கொண்டாடப்படுகிறது.

வேளாண்மையை அடிப்படையாக கொண்ட தமிழர் தம் இறைவனான சூரியனுக்கு நன்றி சொல்ல நடத்தப்படும் பண்டிகை பொங்கல் திருநாள்.

இந்நாளன்று வெறும் பழைய பொருட்களை மட்டும் எரிக்காமல் மனதில் இருக்கும் கவலைகள், வெறுப்பு, பொறாமை என பல தீய எண்ணங்களையும் எரித்துவிட்டு புது வாழ்வு வாழ வேண்டும்.

இத்திருநாளை உழவர் திருநாள் என்றும் போற்றுவர்.

தை மாத முதல் நாள் பொங்கல் கொண்டாடப்படுகிறது

இத்தனை சிறப்புக்கள் கொண்ட தமிழர்களின் கலாச்சார விழாவை நாம் இனிதே கொண்டாடி மகிழ்வோம்.

வேளாண்மைக்கு உறுதுணையாக இருக்கும் வீட்டு விலங்குகள் மற்றும் கால்நடைகளுக்கு நன்றி சொல்லும் விழா மாட்டுப் பொங்கலாகும்

உழவர்களின் உழைப்பால் விளைந்த பொருட்களைக் கொண்டு புதுப்பானையில் பச்சரிசி பொங்கலிட்டு பால் பொங்கும் போது 'பொங்கலோ பொங்கல்' என மகிழ்ச்சியுடன் ஓசை எழுப்புவர்

இம்மாட்டுப் பொங்கல் பண்டிகையின் மூன்றாம் நாள் விழாவாகும்.

காணும்பொங்கல் என்பது உற்றார் உறவினர் பிரிந்து சென்ற நண்பர்களை மீண்டும் கண்டு உறவைப் புதுப்பிக்கும் நிகழ்வாகும்

இன்றைய தினம் மாடுகள் வசிக்கும் இடங்களைச் சுத்தம் செய்து மாடுகளைக் குளிப்பாட்டி வர்ணம் பூசி, உழவு கருவிகள் அனைத்தையும் வைத்து படையல் வைத்து பொங்கல் வைக்க படுகிறது.

இக்காணும் பொங்கல் பண்டிகையின் நான்காவது தின கொண்டாட்டமாகும்.



LIVEWORKSHEETS